[12th March 1960

கிடைக்கிறது. இதுமாதிரி வேறு இடங்களில் கூட்டம் வரும் அதனுல் மக்கள் பலன் அடைவார்கள் என்று தெரிந்தால் அத் தகைய பொருட்காட்சிகளிலும் சர்க்கார் பங்கு எடுத்துக் கொள்ளும்.

SRI S. LAZAR: வேறு அரசியல் கட்சிகள் இம்மாதிரி பொருட்காட்சிகள் நடத்த முன் வந்ததா? முன்வந்து அர சாங்கத்திடம் கோரியது உண்டா? அப்படி கோரி மறுக்கப் பட்டது உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am sorry, I do not have information with regard to exhibitions conducted by any of the other political parties.

SRI V. K. KOTHANDARAMAN: தேனும்பேட்டைக் கண் காட்சியில் சர்க்கார் பங்கு எடுத்துக்கொண்டதன் விளைவாகத் தான் மக்கள் ஏராளமாகக் கலந்துக்கொண்டார்கள் என்று சொல்லப்படுகிறது. இதுபோன்று சர்க்கார் பங்கு எடுத்துக் கொள்வதன் மூலம் மற்ற பொருட்காட்சிகளிலும் மக்கள் ஏராளமாக கலந்துக்கொள்ளவேண்டுமென்று உத்தேசித்து, அவைகளிலும் சர்க்கார் பங்கு கொள்ளுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: சில வகைகளில் மக்களுக்கு வழக்கமாகப் போகக் கூடிய பழக்கம் ஏற்பட்டு விடுகிறது. அதைவிட்டு விட்டு வேறு கண்காட்சிகளில் மக்கள் வருகிறுர்களா இல்லையா என்ற விஷப்பரீட்சை பார்க்கத் தயாராய் இல்லை.

Avenue trees

MR. SPEAKER: ஸ்ரீ தியாகராஜன் அவர்கள் வந்துவிட்டார். 291-வது கேள்வியை எடுத்துக்கொள்வோம். கனம் மந்திரி அவர்கள் பதில் கூறுவார்.

*291 *Q.*—SRI N. R. THIAGARAJAN: கனம் பொது மரா மத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்கு பதிலளிப்பாரா—

(அ) சாலை மரங்கள் கண்டபடியாக வெட்டப்படுவதைத் தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) மதுரையிலிருந்து உசிலம்பட்டி வரையிலும் மரம் ஒன்றுகூட உருப்படியாக இல்லையென்பதை சர்க்கார் அறியுமா?

THE HON. SRI P. KAKKAN: (*a*) Necessary steps have been taken to prevent indiscriminate cutting of avenue trees on roads. Further steps are also under consideration.

(*b*) It has been reported that some of the avenue trees on this road are not in good condition, due to vandalism.

12th March 1960]

SRI N. R. THIAGARAJAN: இந்தசாலைமரங்களை பகுதி நிலக்காரர்களுக்கு மரப்பட்டா விட்டாவது, சாலைமரங்களை வெட்டினல் பகுதி ஊரிலுள்ளவர்களுக்கு கூட்டு அபராதம் விதிப்பது போன்ற காரியங்களைச் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI P. KAKKAN: இந்த மரங்களை எவ்வாறு பாதுகாப்பது என்பதுபற்றி ஏற்கனவே அரசாங்கம் ஒரு கமிட்டி அமைந்து பரிசீலனை செய்திருக்கிறது. இதிலே இப்பொழுது எந்தெந்த ஊர் பஞ்சாயத்து போர்டுக்கு பகுதி மரங்களை ஒரு வருஷத்திற்கு டெம்பரரியாகவாவது குத்தகை கொடுத்து மரங்களைப் பாதுகாக்க அரசாங்கம் பரிசீலனை செய்துவருகிறது.

SRI A. VEDARATHNAM: இந்தக் குறிப்பிட்ட சாலைகளில் உள்ள மரங்கள் அனேகமாக வெட்டி தீர்ந்தாகிவிட்டது. அதை ஒரே நாளில் வெட்டுவதில்லை. தினம் கொஞ்சம் கொஞ்சமாக வெட்டுகிறார்கள். ஆரம்பத்திலேயே அதைத் தடுக்க முயற்சி எடுத்துக்கொண்டிருந்தால் இவ்வளவு சேதம் ஆகாமல் பார்த்துக்கொண்டிருக்கலாம். இனிமேலாவது சேதம் ஆகாமல் இருக்க அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொள்ளும் ?

THE HON. SRI P. KAKKAN: எல்லா மரங்களும் வெட்டப்படவில்லை. இன்னும் ஜாஸ்தி மரங்கள் இருக்கின்றன. மரங்களைப் பாதுகாக்க இப்போது அரசாங்கம் நல்ல கவனம் செலுத்திவருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Fixation of wages for agricultural labour

* 305 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) விவசாயிகள் கூலி நிர்ணயத்தைக் குறித்து சர்க்கார் வெளியிட்ட அறிக்கைக்கு ஆட்சேபணைகள் ஏதாகிலும் வந்ததா ?

(ஆ) அப்படியானல் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN: (அ) & (ஆ) சர்க்கார் வெளியிட்ட அறிக்கைக்கு ஆட்சேபணைகள் வந்தன. அவைகளை பரிசீலனை செய்தபிறகு விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

SRI S. M. ANNAMALAI: ஸார், இப்போது நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிற குறைந்தபட்ச கூலிக்கும் சாதாரணமாக விவசாயிகள் செய்த பழக்கவழக்கங்களுக்கும் ஒருவித சம்பந்தமும் கிடையாது. கூலி எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது ? அந்த நிர்ணயிக்கப்பட்ட கூலியானது மினிமம் வேஜஸ் ஆக்டின் கீழ் நோடிபிகேஸன் செய்யாமல், அதற்குத் தனியாக ஒரு மசோதா தயாரித்து இந்த மன்றத்தின் முன்னல் கொண்டுவரமுடியுமா ?